**O.S.No.52/2007    P.W.1-ரவி என்கிற சண்முகசுந்தரம்    08.12.2017**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

தாவா சொத்து கருமாரப்பாக்கம் கிராமம் திருக்கழுக்குன்றம் தாலுக்காவில் உள்ளது. அதன் மொத்த விஸ்தீரணம் 9 ஏக்கர் 53 சென்டு. நான் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். நான் இந்த வழக்கில் வேறு பரிகாரம் ஏதும் கேட்கவில்லை. திருக்கழுக்குன்றம், பரமசிவம் நகரை சார்ந்த மோகன் என்பவரை எனக்கு தெரியும். திருக்கழுக்குன்றம், வகாப் நகரை சார்ந்த நாகூர்மீரான் என்பவரை எனக்கு தெரியும். அவர்கள் இருவரும் பிரதிவாதிகளிடம் தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களை கிரயம் கேட்டார்களா என்றால் 4 அயிட்டங்கள் அல்ல. 1 முதல் 7 அயிட்ட சொத்துக்களை கிரயம் கேட்டார்கள். ஒரு சென்டிற்கு 10,390/- என்று விலை நிர்ணயம் செய்து கேட்டார்கள். பிரதிவாதிகளுக்கு 1984ம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரம் மூலம் தாவா சொத்தில் உரிமை வந்தது. அந்த பாகப்பிரிவினை பத்திர நகல்களை மோகன், நாகூர் மீரான் ஆகிய இருவருக்கும் பிரதிவாதிகள் கொடுத்தார்கள். நான் மேற்படி இருவர் மூலமாக தான் தாவா சொத்து கிரயத்திற்கு வந்த விவரத்தை தெரிந்து கொண்டேன். பிரதிவாதிகளிடமிருந்து மேற்படி இருவர் மூலமாக அசல் பாகப்பிரிவினை பத்திரத்தினை வாங்கி பார்த்தேன். பொதுவாக கிரயம் வாங்குபவர்கள் சொத்திற்கான வில்லங்கம் போட்டு பார்ப்பார்கள் என்றால் சரிதான். அப்பொழுது வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை. நாகூர் மீரான் தாவா சொத்திற்கு வில்லங்கம் போட்டு வைத்திருக்கவில்லை. நாகூர் மீரான் தாவா சொத்திற்கு வில்லங்கம் போட்டு வைத்திருந்தார் என்றும், அதை நான் பார்த்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. திருக்கழுக்குன்றம் வழக்கறிஞர் திரு.முத்து என்பவரை பிரதிவாதிகள் மூலமாக தெரியும். நாகூர் மீரான் என்பவர் முத்து அலுவலகத்தில் இருந்தார். தாவா சொத்து ஒப்பந்தத்திற்கான முத்திரை தாள் என் பெயரில் ஆதம்பாக்கத்தில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தம் ஆதம்பாக்கத்தில் டைப் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சந்திரன் என்பவர் திருக்கழுக்குன்றம் சாமுண்டீஸ்வரி அம்மன் கோவிலில் பூசாரியாக இருக்கிறார் என்றால் சரிதான். அவரை பிரதிவாதிகள் அழைத்து வந்தார்கள். அவரை நான் தான் அழைத்து வந்தேன் என்று சொன்னால் அது சரியல்ல. நாகூர்

மீரான் மூலமாக மேற்படி பூசாரி சந்திரனை தெரிந்து கொண்டேன் என்றால் அது சரியல்ல. பிரதிவாதிகள் மூலமாக தெரிந்து கொண்டேன். மோகன், நாகூர்மீரான் இருவரும் நில தரகர்கள் என்றால் சரிதான். தாவா 5 மற்றும் 6 அயிட்ட சொத்துக்களை 1ம் பிரதிவாதி 11.06.1992ல் விவேகானந்தன் என்பவருக்கு விற்பனை செய்து விட்டாரா என்றால் சரிதான். தாவா 7 அயிட்ட சொத்துக்களை 2ம் பிரதிவாதி 13.09.1991ல் விவேகானந்தன் என்பவருக்கு விற்பனை செய்து விட்டாரா என்றால் சரிதான். விவேகானந்தன் எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் அதிகார பத்திரத்தை பிரதிவாதிகள் காண்பித்தார்கள். பார்த்தேன். அது 2006ம் ஆண்டு எழுதப்பட்டது. அது தனித்தனி அதிகார பத்திரங்களா என்பது எனக்கு தெரியாது. ஒன்றே ஒன்றை தான் பார்த்தேன். அந்த அதிகார பத்திரங்களை பற்றி எனது விற்பனை ஒப்பந்தத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த அதிகார பத்திரங்கள் விற்பனை ஒப்பந்தத்திற்கு பின்பு தான் வாங்கப்பட்டது. நான் அக்ரிமெண்ட் போட்ட பிறகு தனியாக வில்லங்கம் போட்டு பார்த்தேன்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்தப்படுகிறது).

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

மோகன் திருக்கழுக்குன்றம், காந்தி கிராமம், சோப்பு கம்பெனியில் வேலை செய்கிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் கூட்டு குடும்ப மேலாளர் என்ற வாசகம் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் கருமாரப்பாக்கம் மெயின் ரோட்டிற்கு கிழக்கில் உள்ளது என்றால் சரிதான். ஆக்கிரமிப்பாளர்களை அகற்றி ஒப்படைக்க வேண்டுமென்ற வாசகம் வா.சா.ஆ.1ல் இருக்கிறதா என்றால் அவ்வாறில்லை. ஆனால் வாய்மொழியாக சொன்னேன். நாகூர் மீரான் தாவா கிரய ஒப்பந்தத்தின் போது வில்லங்கம் வாங்கி பார்க்கவில்லை. நானும் வில்லங்கம் வாங்கி பார்க்கவில்லை. பொதுவாக சொத்து வாங்கும் போது வில்லங்கம் வாங்கி பார்ப்பது வழக்கம் என்றால் சரிதான். தாவா சொத்தில் அயிட்டம் நம்பர் 5, 6, மற்றும் 7ல் ஒரு ஏக்கர் மட்டும் விவேகானந்தம் என்பவருக்கு பிரதிவாதிகளால் விற்கப்பட்டுள்ளது என்றால் அயிட்டம் நம்பர் 4ல் 314/2பி-ல் 50 சென்டும், அயிட்டம் நம்பர் 5ல் 53 சென்டும் ஆக ஒரு ஏக்கர் 3 சென்டு முதல் பிரதிவாதி ஏற்கனவே விற்று விட்டார். அயிட்டம் நம்பர் 7ல் 316/1ல் மொத்த விஸ்தீரணம் 4.15 ஏக்கரில் ஒரு ஏக்கர் மட்டும் 2ம் பிரதிவாதி விவேகானந்தன் என்பவருக்கு ஏற்கனவே விற்று விட்டார். தாவா ஒப்பந்தத்திற்கு முன்னதாகவே விவேகானந்தன் என்பவருக்கு பிரதிவாதிகளால் விற்கப்பட்டு விட்ட விவரம் நான் ஒப்பந்தம் போட்ட பிறகு தான் எனக்கு தெரிய வந்தது. தாவா ஒப்பந்தம் போட்ட அன்று பவர் பற்றிய பேச்சு வார்த்தையே கிடையாது. வா.சா.ஆ.1ல் பவரை பற்றிய வாசகங்களும் இல்லை. தாவா ஒப்பந்தத்தில் ஒரு சென்டிற்கு ரூ.10,390/- என்று தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா ஒப்பந்த தேதியில் 19 லட்சம் முதல் தவணையாக கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் 1 முதல் 4 இன சொத்துக்கள் முதல் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா சொத்தில் இனம் 7ல் உள்ள கிணறு 2ம் பிரதிவாதிக்கு சொந்தம் என்றால் கிணறும் அது உள்ள நிலமும் 2ம் பிரதிவாதிக்கு சொந்தம். முதல் பிரதிவாதிக்கும் இரண்டாம் பிரதிவாதிக்கும் தனித்தனி சொத்துக்கள் என்றால் சரிதான். ஆனால் இடம் ஒன்று. வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தில் நானும் கையொப்பம் இட்டுருக்கிறேன்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

**O.S.No.52/2007　　　　P.W.1-ரவி என்கிற சண்முகசுந்தரம்　　　26.04.2018**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

தாவா 5 முதல் 7 அயிட்ட சொத்துக்கள் வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் தட்டச்சு பிழையால் வேறு சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தில் இல்லாத தாவா 5 முதல் 7 அயிட்ட சொத்துக்களை வழக்கில் குறிப்பிட்டிருக்கிறோம் என்றால் தட்டச்சு பிழையால் வேறு சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி தட்டச்சு பிழையின் காரணமாக ஒப்பந்தத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென்று பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை அளவீடு செய்து விஸ்தீரணம் சரிபார்த்து பணம் கொடுத்து கிரயம் செய்து கொள்ள வேண்டுமென்று தாவா ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டள்ளது என்றால் சரிதான். தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.44,88,480/- என்றால் சரியல்ல. சர்வே எண்.316/1ல் உள்ள கிணற்றிற்கு மதிப்பு போடவில்லை என்றால் 7வது அயிட்ட சொத்தில் கிணறு இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கிணற்றிற்கு மதிப்பு போடவில்லை. கிணற்றின் மதிப்பு ரூ.50,000/- இருக்குமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.9 வழக்கறிஞர் அறிவிப்புகளில் வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தில் உள்ள சொத்து விவரத்தை குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அதற்கு மறுப்பு தெரிவித்து தட்டச்சு பிழை என்ற விவரத்தை குறிப்பிட்டு பதில் அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை என்றால் அப்பொழுது அந்த விவரம் பற்றி எனக்கு தெரியாது. நான், மோகன் மற்றும் நாகூர்மீரான் ஆகியோர் சேர்ந்து பிரதிவாதிகளுக்கு தெரியாமல் தவறான சர்வே எண்களை வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தில் சேர்த்து விட்டோம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஒப்பந்தம் பிரதிவாதிகளின் வழக்கறிஞரால் தயாரிக்கப்பட்டது. கிரய ஒப்பந்தத்தை திருத்தி கொடுக்க வேண்டுமென்று பிரதிவாதிகளிடம் நான் கேட்கவில்லை என்றால் விவரம் வழக்குரை தயார் செய்த போது தான் தெரியவந்தது. எனவே அவ்வாறு கேட்கவில்லை. திருத்தி கொடுக்குமாறு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். தாவா 5 முதல் 7 அயிட்ட சொத்துக்கள் கிரயம் கொடுக்க பிரதிவாதிகளால் ஒப்புக் கொள்ளப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களுக்கு பதிலாக வழக்கில் வேறு சொத்துக்களை கிரயம் செய்து கொடுக்க கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தில் 01.04.2006 தேதியில் 60 நாட்கள் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது

என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் அவர்கள் சம்மதித்தன் பேரில் அனுப்பவில்லை. 60 நாட்களில் கிரயம் செய்து கொடுக்க சம்மதித்த விவரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த 60 நாட்களுக்குள் பாக்கி கிரய தொகையை நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த சொத்தில் ஒரு பகுதியை விற்று விட்டதால் கொடுக்கவில்லை. அந்த சொத்தை பிரதிவாதி அவரது சகோதரியின் கணவர் விவேகானந்தர் என்பவருக்கு விற்று விட்டார். அந்த விவேகானந்தன் என்பவரை வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை. 60 நாட்கள் முடிந்து வெகுநாட்கள் கழித்து 14.07.2006 அன்று 21 லட்சம் பிரதிவாதிகளுக்கு கொடுத்தேன் என்றால் சரிதான். அன்றைய தேதியில் வா.சா.ஆ.1ல் 40 நாட்கள் அவகாசம் கொடுக்கப்பட்டு, எழுதப்பட்ட மேற்குறிப்பில் 46 நாட்கள் என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 46 நாட்கள் தான். பூஜ்ஜியம் 6 என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு குறிப்பிட்ட காலத்திற்குள் மீதி பணத்தை செலுத்தவில்லை என்றால் ஏற்கனவே அதில் பாதி சொத்தை விற்று விட்டதால் மீதி பணத்தை செலுத்தவில்லை. அவ்வாறு விற்கப்பட்டது ஒப்பந்தத்திற்கு முன்னதாகவே என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் செய்யப்பட்ட மேற்குறிப்பில் குறிப்பிட்ட காலவரையறைக்குள் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதின் அடிப்படையில் வா.சா.ஆ.1ல் மேற்குறிப்பில் காலஅவகாசம் குறிப்பிடப்பட்டதா என்றால் அவர்களாகவே எழுதினார்கள். நான் சொல்லி தான் காலஅவகாசம் குறிப்பிடப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ள மேற்குறிப்பின் படி காலஅவகாசம் ஆகஸ்டு 2006ல் முடிவுற்றது என்றால் சரிதான். பிரதிவாதிகள் அவர்களது கடன்களை பைசல் செய்வதற்காக சொத்துக்களை விற்க வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் 06.11.2006ல் எனக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் 01.04.2006 தேதியிட்ட தாவா ஒப்பந்தம் கேன்சல் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டதா என்றால் அவ்வாறு தெரிவிக்கவில்லை. 13.11.2006ல் நான் பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் சர்வே எண் 314/2 என்று கண்டுள்ளதா என்றால் தாவா அயிட்டம் 6யை குறிப்பிட்டு அவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

13.11.2006 பதில் அறிவிப்பில் தாவா சொத்துக்கள் 5 முதல் 7 பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் அப்பொழுது எனக்கு தெரியாது. அந்த சொத்துக்களை பற்றி திருத்தல் பத்திரம் எழுதி கொடுக்க வேண்டுமென பரிகாரம் கேட்கப்படாததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 02.01.2007 அன்று வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அந்த அறிவிப்பின் போது கிரய பாக்கி தொகை கொடுக்கவில்லை என்றால் கிரய பாக்கி பணத்தை கொடுக்க தயாராக இருப்பதாக அந்த அறிவிப்பில் குறிப்பிட்டிருக்கிறேன். 04.01.2007 அன்று பிரதிவாதிகள் அந்த அறிவிப்பிற்கு பதில் கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். அது தான் வா.சா.ஆ.9. மறுபடியும் 13.01.2007 அன்று நான் மற்றொரு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அப்பொழுதும் கிரய பாக்கி தொகையை கொடுக்கவில்லை என்றால் நான் பணம் தயாராக தான் வைத்திருந்தேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 14.07.2006 அன்று எழுதிய மேற்குறிப்பில் குறிப்பிட்டவாறு 40 நாட்கள் அவகாச காலத்திற்குள் இந்த வழக்கு தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதிக்கு 3 குழந்தைகள் இருக்கின்ற விவரம் ஒப்பந்த நாளன்று தெரியாது. தற்போது தெரிய வந்தது. முதல் பிரதிவாதியின் குழந்தைகளுக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றால் அது சரியல்ல. உரிமை கிடையாது. முதல் பிரதிவாதி கிரய ஒப்பந்தத்தில் கூட்டு குடும்ப மேலாளர் என்ற முறையில் கையொப்பம் இடவில்லை என்று சொன்னால் கிரய ஒப்பந்தத்தில் என்னுடைய இதர வாரிசுகளை கொண்டு பத்திரம் பதிவு செய்து தருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கிரய ஒப்பந்தக்காலத்தில் முதல் பிரதிவாதிகளின் குழந்தைகள் மூவரும் இளவர்கள் என்பதால் இந்த கிரய ஒப்பந்தம் அவர்களை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் அது சரியல்ல. 13.11.2006 அன்று பதில் அறிவிப்பில் கிரய ஒப்பந்தம் சென்னை, ஆதம்பாக்கத்தில் ஏற்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆதம்பாக்கத்தில் பணம் கொடுத்தேன். நான் பிரதிவாதிகள் மீது ஆதம்பாக்கம் காவல் நிலையத்தில் பணம் கொடுத்தது சம்பந்தமாக கிரிமினல் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். ஆதம்பாக்கத்தில் பணம் கொடுத்ததால் அந்த குற்ற வழக்கை அங்கு தாக்கல் செய்திருக்கிறேன். அந்த குற்ற வழக்கு பூந்தமல்லி நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. கிரய ஒப்பந்தம் திருக்கழுக்குன்றத்தில் ஏற்படுத்தப்படவில்லை

என்றும், ஆதம்பாக்கத்தில் தான் ஏற்படுத்தப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. முத்து வழக்கறிஞர் கிரய ஒப்பந்தத்தை தயார் செய்யவில்லை என்றும், கையொப்பம் மட்டும் போட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. கிரய ஒப்பந்தம் ஆதம்பாக்கத்தில் என்னால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா அயிட்டம் 1ல் உள்ள ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற வேண்டுமென்று தாவா ஒப்பந்தத்தில் குறிப்பிடவில்லை என்றால் வாய்மொழியாக ஒத்து கொண்டார்கள். நானும் என் முகவர்களும் ஆக்கிரமிப்பாளர்களை நாங்களே அகற்றி கொள்வதாக ஒப்புக்கொண்டோம் என்று சொன்னால் அது சரியல்ல. தாவா அயிட்டம் 1ல் ஆக்கிரமிப்பாளர்கள் இது வரை இருக்கிறார்கள் என்றால் சரிதான். ஆக்கிரமிப்பாளர்களை காலி செய்த பிறகு தான் இந்த வழக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று சொன்னால் கால விரயம் ஏற்படும் என்பதால் உடனடியாக இந்த வழக்கை தாக்கல் செய்தேன். ஆக்கிரமிப்பாளர்களை காலி செய்யாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுவதற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை அளந்து விஸ்தீரணம் சரிபார்ப்பதற்கு பிரதிவாதிகள் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்று சொன்னால் பிரதிவாதிகள் ஒத்துழைக்கவில்லை. அளப்பதற்கு வரவே இல்லை. பிரதிவாதிகள் தாவா சொத்தை நான் அளப்பதற்கு வரவே இல்லை என்று சொல்வது சரியல்ல. 4 முறை போயிருக்கிறேன். தாவா ஒப்பந்தம் ஆதம்பாக்கத்தில் என்னால் தயார் செய்யப்பட்டது என்பதால் பிரதிவாதிகளுக்கு தெரியாமல் தவறான சர்வே எண்களையும் கிரய ஒப்பந்தத்தில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா ஒப்பந்தம் பிரதிவாதிகளின் வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. 2ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். முதல் பிரதிவாதிக்கு காது கேட்காது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகளின் உடல் நிலை மற்றும் அறியாமையை பயன்படுத்தி தாவா ஒப்பந்தத்தை நான் ஏற்படுத்தி கொண்டேன் என்று சொன்னால் அது சரியல்ல. தாவா அயிட்டம் 3, சர்வே எண் 314/1சி2, 87 ½ சென்டு விஸ்தீரணம் கொண்டது என்றும், ஆனால் தாவா ஒப்பந்தத்தில் 1 ஏக்கர் 86 சென்டு என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தட்டச்சு பிழை ஏற்பட்டுள்ளது. ஆனால் ஹெக்டேர் அளவில் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. 14.08.2006 முதல் 02.01.2007 வரை கிரய பாக்கி பணத்தை கொடுக்கவில்லை என்றும், கிரய

பத்திரம் பதிவு செய்துகொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 8 முறை நான் போய் பார்த்தும் அவர்கள் சரிவர ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. நான் மீதி பணத்தை கொடுத்து கிரயம் செய்து கொள்ள தயார் நிலையிலும், விருப்பதுடனும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எப்பொழுதும் தயாராக தான் இருந்தேன். விருப்பத்துடனும் தயார் நிலையிலும் இருந்ததாக வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 15.10.2006 உள்ளாட்சி தேர்தல் வரை காத்திருக்க வேண்டுமென்று 2ம் பிரதிவாதி சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் 17.10.2006, 20.10.2006 மற்றும் 03.11.2006 ஆகிய தேதிகளில் நான் பிரதிவாதிகளை சந்திக்கவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் செயல்படாததாலும், ஒப்பந்தம் கால தாமதம் ஆகிவிட்டதாலும் பிரதிவாதிகள் ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டார்கள் என்றால் சரியல்ல. போலீசில் புகார் கொடுத்து பிரதிவாதிகளை நிர்பந்தப்படுத்தி தாவா சொத்தை அடைய முயற்சி செய்ததாக சொன்னால் சரியல்ல. நான் தவறான குற்ற வழக்கை தாக்கல் செய்திருப்பதாக சொன்னால் சரியல்ல. தவறான குற்ற வழக்கை தாக்கல் செய்து பிரதிவாதிகளுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியிருப்பதாக சொன்னால் சரியல்ல. வழக்கு முடியாத நிலையில் பிரதிவாதிகளுக்கு எதிராக தமிழ் நாளிதழில் நில மோசடி செய்ததாக நான் விளம்பரம் கொடுத்ததாக சொன்னால் சரியல்ல. நான் விளம்பரம் எதுவும் கொடுக்கவில்லை. குற்ற வழக்கையும், சிவில் வழக்கையும் பிரதிவாதிகள் எதிர் வியாஜியம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் சிவில் வழக்கை கிரிமினல் வழக்காக மாற்றி விட்டேன் என்றால் சரியல்ல. தாவா 5 முதல் 7 சொத்துக்கள் பிரதிவாதிகள் கிரயம் கொடுக்க ஒப்புக்கொள்ளவில்லை என்பதாலும், 06.11.2006 அறிவிப்பின் மூலம் கிரய ஒப்பந்தத்தை பிரதிவாதிகள் ரத்து செய்து விட்டதாலும், நான் இந்த வழக்கை போட முடியாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் 40 லட்சத்தை திரும்ப கொடுத்தார்கள் என்றும், அதை நான் வாங்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் கிரய பத்திரம் பதிவு செய்வதற்காக வாங்கி வைத்திருந்ததாக சொல்லும் முத்திரை தாள்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் முத்திரை தாள்களை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சரியான விவரங்களுடன் நீதிமன்றத்தை அணுக வில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று

சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கோரும் எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

01.04.2006 கிரய ஒப்பந்தம் மோசடியானது என்று சொன்னால் சரியல்ல. 01.04.2006 ஒப்பந்தம் போடுவது தொடர்பாக அசல் வழக்கு எண்.420/2007ல் வாதிகளிடம் சம்மதம் பெறவில்லை என்றால் அவர்களுக்கு உரிமை கிடையாது. அதனால் சம்மதம் பெற அவசியம் இல்லை. முதல் பிரதிவாதி குடும்ப சொத்துக்களை விற்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. குடும்ப செலவிற்காக தான் விற்க முன் வந்தார். முதல் பிரதிவாதிக்கு குடும்ப செலவு ஏதுமில்லை என்றும், அந்த சொத்தை விற்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண்.420/2007ல் வாதிகள் முதல் பிரதிவாதியின் கிரய ஒப்பந்தத்தை ஆட்சேபித்து தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ஒரே வீட்டில் தான் வசித்து வருகிறார்கள். முதல் பிரதிவாதிக்கு நான் கொடுத்த அட்வான்சு பணம் சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளால் விரயம் ஆகி விட்டது என்று சொன்னால் சரியல்ல. முதல் பிரதிவாதிக்கு நான்கில் ஒரு பங்கு சொத்திற்கு மட்டுமே உரிமையிருக்கிறது என்று சொன்னால் முழு சொத்திற்குமே அவருக்கு உரிமையிருக்கிறது. அசல் வழக்கு எண்.420/2007ல் 2 முதல் 4 வாதிகளுக்கு நான்கில் ஒரு பாகம் உரிமையிருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண்.420/2007ல் முதல் வாதிக்கு ஜீவனாம்ச உரிமை உண்டு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களில் நான்கில் ஒரு பாகம் உரிமையுண்டு (Charge) என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண்.420/2007ல் தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**O.S.No.52/2007 P.W.1-ரவி என்கிற சண்முகசுந்தரம் 20.11.2018**

**அசல் வழக்கு எண்.420/2007 வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.52/2007ல் முதல் பிரதிவாதி சுரேந்திரன் செட்டியார், அசல் வழக்கு எண்.420/2007ல் முதல் வாதியின் கணவர் மற்றும் 2 முதல் 4 வாதிகளின் தகப்பனார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்துக்களும், அசல் வழக்கு எண்.420/2007ல் குறிப்பிட்டுள்ள வழக்கு சொத்துக்களும், அசல் வழக்கு எண்.52/2007ல் உள்ள 1, 2 பிரதிவாதிகளின் பூர்வீக குடும்ப சொத்துக்கள் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.52/2007ல் உள்ள சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகளுக்கு எப்படி கிடைத்தது என்று தெரியுமா என்றால் தெரியும். அசல் வழக்கு எண்.52/2007ல் 1, 2 பிரதிவாதிகளின் தந்தையார் வேணுகோபால் செட்டியார் கிரயம் வாங்கிய சொத்தாகும். தாவா சொத்து அசல் வழக்கு எண்.420/2007ல் உள்ள 2 முதல் 4 வாதிகளின் பூர்வீக சொத்துக்கள் தான் என்றால் அது கிடையாது. தாவா சொத்து அசல் வழக்கு எண்.420/2007ல் 2 முதல் 4 வாதிகளின் பூர்வீக சொத்துக்கள் என்றும், நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**அசல் வழக்கு எண்.420/2007 வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

நான் ஒப்பந்தம் போட்டுள்ள சொத்துக்கள் அசல் வழக்கு எண். 52/2007ல் 1, 2 பிரதிவாதிகளின் சுய சம்பாத்திய சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 52/2007ல் 1, 2 பிரதிவாதிகளின் பெயரில் இந்த வழக்கு சொத்துக்கள் குறித்து கிரய பத்திரம் ஏதாவது உண்டா என்றால் கிரயப்பத்திரம் கிடையாது. பாகப்பிரிவினை பத்திரம் உள்ளது. அந்த பாகப்பிரிவினை பத்திரம் அசல் வழக்கு எண் 52/2007ன் 1, 2 பிரதிவாதிகளின் பூர்வீக சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டதால் கிடைத்த பாகப்பிரிவினை பத்திரம் என்றால் அது பூர்வீக சொத்து கிடையாது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தின் அசல் அல்லது நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அசல் வழக்கு எண்.420/2007 என்ற வழக்கில் 1, 2 பிரதிவாதிகளுக்கிடையே நடந்த பாகப்பிரிவினை பத்திரம் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும். 07.05.1984 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் "பிதுரார்ஜிதமாகவும், சுயார்ஜிதமாகவும்" என்ற வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் பக்கம் 2ல் "கிரய பதிவின் போது எங்களது இதர வாரிசுகளை கொண்டும் பதிவு செய்து கொடுக்க சம்மதிக்கிறோம்" என்ற வாசகம் காணப்படுகிறது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.420/2007ல் 2 முதல் 4 வாதிகள் என்னுடன் விக்ரய ஒப்பந்தம் ஏதும் போடவில்லை என்றால் சரிதான். அவர்களுக்கு உரிமை கிடையாது. அசல் வழக்கு எண்.420/2007ல் 2 முதல் 4 வாதிகளுக்கு உரிமை இருப்பதால் தான் வா.சா.ஆ.1ல் பக்கம் 2ல் "கிரய பதிவின் போது எங்களது இதர வாரிசுகளை கொண்டும் பதிவு செய்து கொடுக்க சம்மதிக்கிறோம்" என்ற வாசகம் காணப்படுகிறது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.420/2007ன் 2 முதல் 4 வாதிகள் 31.03.2007ல் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**O.S.No.52/2007 P.W.1-ரவி என்கிற சண்முகசுந்தரம் 11.03.2019**

<u>அசல் வழக்கு எண்.420/2007 வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

அசல் வழக்கு எண்.420/2007ன் 2 முதல் 4 வாதிகள் தாவா சொத்தில் பாகப்பிரிவினை கோரியும், முதல் வாதி, முதல் பிரதிவாதியிடமிருந்து ஜீவனாம்சம் கோரியும் தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். முதல் பிரதிவாதி, முதல் வாதிக்கு ஜீவனாம்சம் கொடுப்பதில் எனக்கு ஆட்சேபனை ஏதுமில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த பத்திரத்தை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த பத்திரத்தில் பக்கம் 2ல் எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த பத்திரம் அசல் வழக்கு எண்.52/2007 வழக்கின் முதல் பிரதிவாதியின் வழக்கறிஞர் திரு.முத்து என்பவரால் தயார் செய்யப்பட்டது. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் தயார் செய்த போது நான் உடனிருந்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் மூல ஆவணங்களை பார்த்து தான் தயார் செய்தார். வா.சா.ஆ.1ல் சொத்து விவரத்தில் 3வது அயிட்ட சொத்து புஞ்சை சர்வே எண்.314/1C2 1 ஏக்கர் 86 சென்ட் என்று கண்டுள்ள சொத்து அவ்வளவு விஸ்தீரணம் கிடையாது என்றால் அது தட்டச்சு பிழை. ஹெக்டர் அளவில் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்து 2 முதல் 4 வாதிகளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், அந்த சொத்துக்கள் டி.வி.சுரேந்திர செட்டியார் மற்றும் டி.வி.சுப்ரமணிய செட்டியார் ஆகியோர்கள் அசல் வழக்கு எண்.420/2007ன் 2 முதல் 4 வாதிகளை சேர்க்காமல் போடப்பட்ட அக்ரிமெண்ட் வா.சா.ஆ.1 என்றும், எனவே அது அவர்களை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண்.420/2007ன் 2 முதல் 4 வாதிகள் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.420/2007 வழக்கு தாக்கல் செய்யும் வரை எந்தவிதமான பதிலும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. பதில் அனுப்பி விட்டேன். வழக்கு தாக்கல் செய்த தேதி 01.08.2007 என்றும், நான் பதில் அனுப்பியது 20.08.2007 என்றும் சொன்னால் அது தவறு. டி.வி.சுரேந்திர செட்டியார் அவரது மனைவி மற்றும் குழந்தைகளை சரியாக பராமரிக்கவில்லை என்றும், அவர்களுக்கு தெரியாமலேயே ஒரு அக்ரிமெண்ட் போடப்பட்டது என்றும், எனவே அசல் வழக்கு எண்.420/2007 அக்ரிமெண்ட் அவர்களை கட்டுப்படுத்தாது என்றும் அசல் வழக்கு எண்.420/2007 வழக்கில் 2 முதல் 4 வாதிகளுக்கு தாவா சொத்தில் நான்கில் மூன்று பாகம் உரிமை உண்டு என்றும் முதல்

பிரதிவாதி முதல் வாதிக்கு மாதம் ரூ.3,000/- வீதம் ஜீவனாம்சம் கொடுக்கவும் உரிமை உண்டு என்றும் சொன்னால் சரியல்ல. நானும் முதல் பிரதிவாதியும் ஏற்படுத்தி கொண்டு ஒப்பந்தம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண்.420/2007 வழக்கில் வாதிகள் கோரிய எல்லா பரிகாரமும் கிடைக்கத்தக்கது என்றும், அசல் வழக்கு எண்.52/2007 வழக்கு செலவு தொகையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.

**O.S.No.52/2007 D.W.1-சுரேந்திரன் 17.09.2019**

**அசல் வழக்கு எண்.420/2007 வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

தனலட்சுமி அம்மாள் என்னுடைய மனைவி என்றால் சரிதான். மௌளீஸ்வரி, ஜெகத்ரட்சகன், அனுராதா ஆகிய மூவரும் என்னுடைய பிள்ளைகள். மேற்படி நான்கு நபர்களும் என் மீதும், ரவி என்கிற சண்முகசுந்தரம் என்பவர் மீதும் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.420/2007ல் உள்ள சொத்துக்கள் எல்லாம் என்னுடைய பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.420/2007ல் 2 முதல் 4 வாதிகளான என் பிள்ளைகளுக்கு தாவா சொத்தில் பாகம் உண்டு என்றால் சரிதான். ரவி என்கிற சண்முகசுந்தரம் என்பவருக்கு நான் எழுதி கொடுத்த கிரய ஒப்பந்தம் அசல் வழக்கு எண்.420/2007ல் 2 முதல் 4 வாதிகளான என் பிள்ளைகளை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். நான் என் மனைவி தனலட்சுமியை சரியாக பராமரிக்காத காரணத்தினால் என் மனைவி ஜீவனாம்சம் கோரிக்கையை அசல் வழக்கு எண்.420/2007ல் கோரியிருக்கிறார் என்றால் சரிதான். நான் என் மனைவிக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.420/2007 வழக்கில் வாதிகள் கோரியவாறு தீர்ப்பாக வேண்டுமென்றால் சரிதான். நானும் பாகம் வேண்டுமென்று தான் கேட்டிருக்கிறேன்.

**O.S.No.52/2007 D.W.1-சுரேந்திரன் 24.09.2019**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

என் தாத்தா பெயர் கண்ணய்யா செட்டியார் என்றால் சரிதான். அவருக்கு வேணுகோபால் செட்டியார், கோவர்த்தன செட்டியார் என்று 2 மகன்கள் என்றால் சரிதான். வேணுகோபால் என் தகப்பனார் என்றால் சரிதான். 1984ல் நானும் என்னுடைய சகோதரரும் பாகம் பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். நாங்கள் இருவர் தான் அசல் வழக்கு எண்.52/2007ல் பிரதிவாதிகள் என்றால் சரிதான். 1984ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை படி 15 ஏக்கர் 26 செண்ட் என்னுடைய பாகத்திற்கும், 4 ஏக்கர் 15 செண்ட் என் சகோதரரான 2வது பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து என்பது என்னுடைய பாகத்திற்கு வந்த 15 ஏக்கர் 26 செண்டில் ஒரு பகுதியும், என சகோதரரின் பாகத்திற்கு வந்த 4 ஏக்கர் 14 செண்டும் தான் என்று சொன்னால் சரிதான். நான் சொன்ன தகவலின் அடிப்படையில் தான் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆரம்பத்தில் இந்த வழக்கை நடத்தியது T.C.A.சீனிவாசன். தற்போது நடத்துபவர் வழக்கறிஞர் ராஜேந்திரன். ராஜேந்திரன் T.C.A.சீனிவாசனின் Junior என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.420/2007ல் T.C.A.சீனிவாசனின் மற்றொரு Junior வழக்கறிஞர் குமார் என்பவர் வாதிகளாகிய என் மனைவி மற்றும் குழந்தைகளின் வழக்கறிஞராக இருக்கிறார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.52/2007ல் தாக்கல் செய்து இரு மாதங்கள் கழித்து எதிர் வழக்குரை தாக்கல் செய்த பிறகு தான் அசல் வழக்கு எண்.420/2007க்கான அறிவிப்பே முதன் முதலில் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். எனது எதிர் வழக்குரையில் தாவா சொத்துக்கள் எல்லாம் பூர்வீக சொத்துக்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்குகளில் தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும், என் தாத்தா பெயரில் இருந்த சொத்துக்கள் என்றும் காண்பிப்பதற்கு ஏதாவது ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்படவில்லை.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**O.S.No.52/2007 D.W.1-சுரேந்திரன் 04.12.2019**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

வழக்கு சொத்துக்களில் எந்தெந்த சொத்துக்கள் என்னால் கிரயம் வாங்கப்பட்டது, எந்தெந்நத சொத்துக்கள் என் அப்பாவால் கிரயம் வாங்கப்பட்டது, எந்தெந்நத சொத்துக்கள் என் தாத்தாவால் கிரயம் வாங்கப்பட்டது என்றால் எல்லா சொத்துக்களுமே என் அப்பா மற்றும் தாத்தாவால் கிரயம் வாங்கப்பட்டது. 1984ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை மூலமாக என் பாகத்திற்கு 15 ஏக்கர் 26 செண்ட் வந்தது. 15 ஏக்கர் 26 செண்ட் முழுவதும் வழக்கு சொத்து இல்லை என்றால் சரிதான். என் பாகமாக வந்த 15 ஏக்கர் 26 செண்டில் சுமார் 7, 8 ஏக்கர் கிரயம் கொடுத்து விட்டேன். நான் யார் யாருக்கு விற்றேனோ அவர்கள் எல்லாம் இந்த வழக்கில் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். அந்த சொத்துக்களை நான் மட்டும் தான் கிரயம் கொடுத்தேன். அந்த கிரய பத்திரங்களில் என் குடும்பத்தினர் யாரும் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். 1981ல் என் சகோதரிகள் என் பெயருக்கும், 2ம் பிரதிவாதியான எனது சகோதருக்கும் விடுதலை பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த விடுதலை பத்திரத்தை பார்த்தால் தான் எந்தெந்த சொத்துக்களுக்கு என் சகோதரிகள் விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்பது தெரிய வரும் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.52/2007 வழக்கின் வாதி ரவி, மற்ற வழக்கில் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்திருக்கிறேனா என்றால் அவ்வாறு தாக்கல் செய்ததாக எனக்கு ஞாபகமில்லை. ஜனவரி 2007ல் ரவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு வழக்கு சொத்துக்கள் குறித்து விஜய் கோத்தாரி என்பவருக்கு நானும் எனது சகோதரரும் சேர்ந்து பதிவு செய்யப்பட்ட கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரிதான். அந்த கிரய ஒப்பந்தம் **வா.சா.ஆ.13**. ஜனவரி 2007ல் போட்ட கிரய ஒப்பந்தத்திலும் நானும் எனது சகோதரரும் மட்டும் தான் எழுதி கொடுத்தோமே தவிர எங்களுடைய பிள்ளைகள் அந்த ஒப்பந்தத்தில் தரப்பினர்களாக இல்லை என்றால் சரிதான். மேற்படி கிரய ஒப்பந்தத்தில் சொத்துக்கள் எனக்கும் என் சகோதரருக்குமான தனிப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விஜய் கோத்தாரி என்பவர் பாகப்பிரிவினை வழக்கில் ஒரு தரப்பினராக இல்லை என்றால் சரிதான். ரவிக்கு கிரய ஒப்பந்தம் போடப்பட்ட இந்த வழக்கு சொத்துக்களின் மொத்த கிரய தொகை ரூ.99,01,670/- என்றால் சரிதான். விஜய் கோத்தாரி என்பவருக்கு போடப்பட்ட வழக்கு சொத்துக்களின் மொத்த

கிரய தொகை ரூபாய் 40 லட்சம் என்று அந்த கிரய ஒப்பந்தத்தில் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.13 கிரய ஒப்பந்தம் ரத்தானதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை வாய்மொழியாக ரத்து செய்யப்பட்டது. அசல் வழக்கு எண்.420/2007ல் கோத்தாரி தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.52/2007ன் வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தை தயார் செய்தது திருக்கழுக்குன்றத்தில் உள்ள மூத்த வழக்கறிஞர் முத்து என்பவர் தான் என்றால் இல்லை. முத்து வழக்கறிஞரை எவ்வளவு காலமாக எனக்கு தெரியும் என்றால் வா.சா.ஆ.1 ஆவணம் தயார் செய்வதற்கு 5 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எனக்கு தெரியும். வழக்கு சொத்துக்களில் ஒரு பகுதி ஆக்கிரமிப்புகளை அகற்ற நான் முத்து வழக்கறிஞர் மூலமாக திருக்கழுக்குன்றம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் அந்த ஒப்பந்தத்தை தயார் செய்தது முத்து வழக்கறிஞர் என்று குறிப்பிடப்பட்டு அவர் கையொப்பம் இட்டிருக்கிறார் என்றால் சரிதான். ஆனால் அவர் தயார் செய்யவில்லை. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் பக்கம் 2ல், "ஒரு சென்டிற்கு ரூபாய்.10,390/- வீதம் ஏக்கர் 9.53 சென்டிற்கு ரூபாய் 99,01,670/- கிரயம் நிச்சயித்த" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். ஆனால் நான் படித்து பார்க்கவில்லை. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் தமிழில் எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தின் ஒவ்வொரு பக்கங்களிலும் நானும் என் சகோதரரும் கையொப்பம் இட்டிருக்கிறோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிலும் நானும் என் சகோதரரும் கையொப்பம் இட்டிருக்கிறோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரமானது பட்டா எண்.93 மற்றும் 94ல் அடங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தை படித்து பார்த்தால் என்ன தெரிகிறது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. கரும்பாக்கம் கிராமத்தில் பட்டா எண்.93 யாருக்கு சொந்தமானது என்றால் அது சுரேந்திரன் பெயரில் உள்ளது. சுரேந்திரன் என்பது நான் தான். பட்டா எண்.93ல் என்னென்ன சர்வே எண்கள் அடங்கியிருக்கிறது என்றால் எனக்கு ஞாபகமில்லை. பட்டா எண்.93யை பார்த்தும் என்னால் தற்போது சொல்ல முடியாது. பட்டா எண்.93 எவ்வளவு விஸ்தீரணத்திற்கு உரியது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பட்டா எண்.94 என் சகோதரர் 2ம் பிரதிவாதி சுப்ரமணியின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். 06.11.2006ல் இந்த வழக்கின் வாதி ரவிக்கு என்னுடைய வழக்கறிஞர் முத்து மூலமாக நானும் என் சகோதரரும் சேர்ந்து ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் முதலில் முன் தொகையாக கிரய ஒப்பந்தம் முன்னிலையில் ரூபாய் 19 லட்சம் வாங்கியது, மற்றும் மேற்குறிப்பின் மூலம் ரூபாய் 21 லட்சம் வாங்கியது, மற்றும் எஞ்சிய தொகையை வாதி கொடுக்காததால் கிரயம் ஏற்படவில்லை என்ற விவரமும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் கொடுத்த அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் 9

ஏக்கர் 53 செண்ட் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் 9 ஏக்கர் 53 செண்ட் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கிற்காக தெரியாது என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய எதிர் வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டவாறு கிரய ஒப்பந்தம் 4 ஏக்கருக்கு மட்டும் தான் போடப்பட்டது என்றும், என்னிடம் தவறான தகவலின் பேரில் கையொப்பம் பெற்று விட்டார்கள் என்றும் சொல்லியுள்ள விவரங்களை மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேலும் அதே முத்து வழக்கறிஞர் மூலம் 04.01.2007 அன்று வா.சா.ஆ.9 வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பினோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொத்து விவரத்தில் 9 ஏக்கர் 53 செண்ட் தான் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ9 வழக்கறிஞர் அறிவிப்புகளில் என்னுடைய கையொப்பமும் என் சகோதரர் சுப்ரமணியின் கையொப்பமும் இருக்கிறது என்றால் சரிதான். வழக்கு சொத்தை குறித்து வா.சா.ஆ.13 கிரய ஒப்பந்தத்தை மற்றொரு நபரிடம் 03.01.2007 அன்று ஏற்படுத்தி கொண்டோம் என்றால் போட்டோம். முடிந்து விட்டது. அதை பற்றி தெரியாது. அந்த கிரய ஒப்பந்தமும் 9 ஏக்கர் 53 செண்டிற்கு தான் என்றால் அது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ரவி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கையும், இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையையும், பற்றியும் நான் படித்து பார்த்தேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைத்த சொத்துக்களில் ஒரு பகுதியை 1988ல் ஜார்ஜ் மற்றும் வர்கீஷ் ஆகியோர்களுக்கு கிரயம் செய்திருக்கிறேன் என்றால் ரொம்ப நாட்களுக்கு முன்னர் விற்பனை செய்தேன். அந்த இரண்டு கிரய பத்திரங்களிலும், அந்த கிரய பத்திரங்களில் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் எங்கள் தந்தை வேணுகோபால் என்பவரின் சொத்துக்கள் என்றும், அவரின் வாரிசுகள் என்ற அடிப்படையில் கிரயம் செய்ததாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர பூர்வீக சொத்துக்கள் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அந்த இரண்டு கிரய பத்திரங்களிலும், அந்த கிரய பத்திரங்களில் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் எங்கள் தந்தை வேணுகோபால் என்பவரின்

சொத்துக்கள் என்றும், அவரின் வாரிசுகள் என்ற அடிப்படையில் கிரயம் செய்ததாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றும், வழக்கிற்காக அவ்வாறு குறிப்பிடவில்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

தாவா சொத்துக்களில் 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களுக்கு மட்டும் தான் தாவா அகிரிமெண்ட் போடப்பட்டது என்ற விவரத்தை 06.11.2006 அன்று வழக்கறிஞர் திரு.முத்து என்பவர் மூலம் அனுப்பிய அறிவிப்பில் சொல்லப்படாததற்கு காரணம் என்னவென்றால் எனக்கு தெரியாது. 13.11.2006 அன்று வாதி பதில் அறிவிப்பு அனுப்பி அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் பட்டா எண்.93, 94ல் உள்ளடக்கிய 9 ஏக்கர் 53 சென்டிற்கு ரூ.99,01,670/- நிர்ணயிக்கப்பட்டது என்றும் அதில் கிரய ஒப்பந்தம் முன்னிலைக்கு 19 லட்சமும், அதன் பின்னிட்டு மேற்குறிப்பின் மூலம் 21 லட்சமும் வாங்கப்பட்டது என்றும், மீதி கிரய தொகை 59,01,670/- என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 04.01.2007ல் கொடுக்கப்பட்ட அறிவிப்பு வா.சா.ஆ.9ல் நானும் என் சகோதரரும் கையொப்பம் இட்டிருக்கிறோம் என்றும், அந்த அறிவிப்பிலாவது 4 ஏக்கருக்கு மட்டும் தான் ஒப்பந்தம் போடப்பட்டது என்ற விவரத்தை குறிப்பிடாததற்கு என்ன காரணம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முத்து வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கும் வரை வேறொரு நிலைப்பாட்டிலும், அதன் பின்னர் வழக்கறிஞர் மாற்றிய பிறகு வேறொரு நிலைப்பாட்டிலும் உள்ளதாக சொன்னால் சரியல்ல. இந்த வழக்குடன் இணைத்து நடத்தப்படும் என் மனைவியால் தாக்கல் செய்யப்பட்ட பாகப்பிரிவினை வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் பத்தி 3ல், "நான் வாங்கிய முன் தொகை 40 லட்சமும் வழக்கு நடத்தவே செலவழிக்கப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் குறிப்பிட்டிருக்கிறேன். நான் நீதிமன்ற கட்டணம் செலுத்தி, வாதி பெயரில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எதிர் வழக்காடுவதற்காகவே செலவாகிவிட்டது என்றால் ஆமாம். எனக்கு குற்றவழக்கில் ஒரு வழக்கறிஞரும், உரிமையியல் வழக்கில் வேறொரு வழக்கறிஞரை நியமித்தும் தான் வழக்கு நடத்துகிறேன் என்றால் சரிதான். வழக்கு செலவிற்காக முன் தொகை முழுவதையும் செலவழித்து விட்டேன் என்பதை காண்பிக்க ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து விவரத்தில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று எனக்கு தெரியாது. அது எத்தனை சர்வே எண்கள், எவ்வளவு விஸ்தீரணம் என்பதும் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் போட்ட போது தாவா

சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தெந்த சொத்துக்களுக்கு நான் உரிமையாளர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து விவர அயிட்டம் 4ல் ஒரு பகுதியான 50 சென்டினையும், அயிட்டம் 5ல் சர்வே எண்.315/4ல் 53 சென்டினையும் ஆக மொத்தம் ஒரு ஏக்கர் 3 சென்டினை 1992ல் விவேகானந்தன் என்பவருக்கு கிரயம் கொடுத்திருக்கிறேன் என்றால் ரொம்ப நாட்கள் ஆனதால் கவனம் இல்லை. என் சகோதரர் அயிட்டம் நம்பர் 7ல் 4 ஏக்கர் 15 சென்டில் ஒரு ஏக்கரை அதே விவேகானந்தனுக்கு 13.09.1991ல் கிரயம் கொடுத்திருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவேகானந்தனிடமிருந்து விவேகானந்தனுக்கு கிரயம் கொடுத்த ஒரு ஏக்கர் 3 சென்டினை பொறுத்து வாதியுடன் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்ட பிறகு ஒரு பொது அதிகார பத்திரம் எழுதி வாங்கினேன் என்றால் சரிதான். அந்த பொது அதிகார பத்திரத்தை எவ்வளவு பணம் கொடுத்து எழுதி வாங்கினேன் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. 03.01.2007 அன்று விஜய்கோத்தாரி என்பவருடன் ஏற்படுத்தி கொள்ளப்பட்ட பதிவு செய்யப்பட்ட கிரய ஒப்பந்தம் மேற்படி பொது அதிகார பத்திரம் மூலம் பெறப்பட்டு ஒரு ஏக்கர் 3 சென்டையும் உள்ளடக்கியது தான் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் சகோதரரும் அவர் கிரயம் கொடுத்த ஒர ஏக்கர் நிலத்தை பொறுத்து விவேகானந்தன் என்பவரிடமிருந்து அதிகார பத்திரம் வாங்கிய பிறகு தான் கோத்தாரியிடம் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 12.09.2019ல் என் மகளுக்கு திருமணம் நடந்தது என்றால் சரிதான். அந்த திருமணம் பத்திரிக்கையில் என் பெயரும் என் மனைவி பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த திருமண பத்திரிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **வா.சா.ஆ.14.** நான் தான் முன்னிருந்து அந்த திருமணத்தை நடத்தி வைத்தேன் என்றால் சரிதான். நானும் என் மனைவி குழந்தைகள் எல்லோரும் ஒன்றாக தான் இருக்கிறோம் என்றும், வழக்கிற்காக ஒன்றாக இல்லை என்று சொல்கிறேன் என்றும் சொன்னால் சரிதான். எனக்கும், என் மனைவி, குழந்தைகளுக்கும் வாக்காளர் அடையாள அட்டை எந்த விலாசத்தில் இருக்கிறது என்றால் நம்பர் 15, கவரை தெரு, திருக்கழுக்குன்றம் என்ற விலாசத்தில் இருக்கிறது. வாதியுடன் ஏற்படுத்தி கொண்ட கிரய ஒப்பந்தத்தை முறியடிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் தான் என் தூண்டுதலின்

பேரில் என் மனைவி மற்றும் குழந்தைகள் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தை எனது வழக்கறிஞர் திரு.முத்து தான் தயார் செய்தார் என்றும், தற்போது வழக்கிற்காக அவ்வாறு இல்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து விவரம் அயிட்டம் 1ல் எங்கள் சொத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு வழக்கறிஞர் திரு.முத்து என்பவர் மூலம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை குறித்து வா.சா.ஆ.1ல் குறிப்பிடவில்லை என்றால் ஆமாம்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**O.S.No.52/2007 D.W.1-சுரேந்திரன் 13.03.2020**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

28.03.1988 தேதியிட்ட கிரய பத்திரம் மூலம் நானும் என் தாயாரும் வர்கீஸ் என்பவருக்கு 4 ஏக்கர் 37 சென்ட் கிரயம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். அதே தேதியில் நானும் என் தாயாரும் ஜார்ஜ் என்பவருக்கு 5 ஏக்கர் 45 சென்ட் கிரயம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். ஆனால் எவ்வளவு விஸ்தீரணம் என்று ஞாபகமில்லை. என் பிள்ளைகள் தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கு அசல் வழக்கு எண் 420/2007ல் மேற்படி இரு சொத்துக்களும் காண்பிக்கப்பட வில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் சகோதரரும் இந்த வழக்கில் 2வது பிரதிவாதியான சுப்ரமணியம் என்னுடைய மைத்துனர் விவேகானந்தன் என்பவருக்கு சர்வே எண்.316/1ல் 4 ஏக்கர் 15 சென்டில் ஒரு ஏக்கர் 13.09.1991ல் கிரயம் கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 11.06.1992ல் சர்வே எண்.314/2ல் 50 சென்டும், 315/4ல் 53 சென்டும் என்னுடைய மைத்துனர் விவேகானந்தன் என்பவருக்கு கிரயம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நானும் என் சகோதரரும் என்னுடைய மைத்துனருக்கு எழுதி கொடுத்த சொத்து குறித்தும், நான் எழுதி கொடுத்த சொத்து குறித்தும் வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு இரு பொது அதிகார பத்திரங்கள் எழுதி வாங்கியிருக்கிறோமா என்றால் நான் எழுதி வாங்கிய பொது அதிகார பத்திரம் பற்றி எனக்கு தெரியும். என் சகோதரர் எழுதி வாங்கிய பொது அதிகார பத்திரம் பற்றி தெரியாது. அசல் வழக்கு எண்.52/2007ல் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை குறித்து மேற்படி பொது அதிகார பத்திரங்கள் முன்னிலைக்கு விஜய் கோத்தாரி என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட கிரய ஒப்பந்தம் 03.01.2007ல் ஏற்படுத்தப்பட்டது என்றால் அக்ரிமெண்ட் போட்டோம். அந்த அக்ரிமெண்ட் நான் தனிப்பட்ட முறையில் தான் போட்டேன் என்றும், என் பிள்ளைகளை சேர்த்து அந்த ஒப்பந்தம் போடப்படவில்லை என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. ஏற்கனவே விற்கப்பட்ட சில சொத்துக்களுக்கும் சேர்த்து கிரய ஒப்பந்தம் போடப்பட்டதாக இந்த வழக்கின் வாதி கொடுத்த குற்ற புகாரின் பேரில் ஒரு குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கின் மீது நான் உயர்நீதிமன்றத்தில் குற்றவியல் சீராய்வு மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த சீராய்வு மனுவில் 9 ஏக்கர் 53 சென்டிற்கு அக்ரிமெண்ட் போடப்பட்டது உண்மை என்றும், அதில் விற்கப்பட்ட சொத்துக்கள் குறித்து 2.71 ஏக்கருக்கு அதிகார பத்திரம் வாங்கியிருப்பதால் தவறான புகாரின் அடிப்படையில்

குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.52/2007ல் குறிப்பிட்டுள்ள மொத்த சொத்திற்கும் தான் ஒப்பந்தம் போடப்பட்டது என்றும், வழக்கிற்காக மொத்த சொத்திற்கு ஒப்பந்தம் போடப்படவில்லை என்று வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண்.52/2007ல் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடாது என்பதற்காக என் பிள்ளைகளை விட்டு அசல் வழக்கு எண்.427/2007யை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எங்களின் தனிப்பட்ட சொத்துக்கள் குறித்து நானும் என் சகோதரரும் சேர்ந்து கிரய தொகைக்கான முன தொகை பெற்றிருப்பதால் வாதி கோரியவாறு அவருக்கு கிரயம் செய்து கொடுக்க கடமைப்பட்டவர் என்றும் சொன்னால் சரியல்ல. வாதி எஞ்சிய கிரய தொகையை கொடுத்து கிரயம் முடிப்பதற்கு எப்பொழுதும் ஆயுத்தமாக இருந்தார் என்றும், நான் தான் தயாராக இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தின் ஒரு பகுதியில் ஆக்கிரமிப்பு இருந்தது என்று சொன்னால் சரிதான். என்னுடைய எதிர் வியாஜ்ஜியத்திற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும், நான் மீதி தொகையை பெற்று கொண்டு வாதிக்கு கிரயம் செய்து கொடுக்க கடமைப்பட்டவர் என்றும் சொன்னால் சரியல்ல. நான் குடும்பத்துடன் தான் வசித்து வருகிறேன் என்றும், வழக்கிற்காக பிரிந்து வாழ்வதாக சொன்னால் சரியல்ல. எனவே வாதி கோரியவாறு அசல் வழக்கு எண்.52/2007 தீர்ப்பாக வேண்டுமென்றும், என் பிள்ளைகளை வைத்து தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.420/2007 செலவு தொகையுடன் தள்ளுபடி ஆக வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் - OS 52/2007 பி.சா.1.**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.ஏ. வெங்கட்ராமன், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: சுரேந்திரன் | தொழில்: |
| த/பெ.: | மதம்: |
| கிராமம்: | ஜாதி: |
| வயது: | வட்டம்: காஞ்சிபுரம் |

**முதல் விசாரணை: 29.08.2019**

நான் இந்த வழக்கில் 1வது பிரதிவாதி 2 வது பிரதிவாதி என்னுடைய சகோதரர். என்னுடைய தகவலின் அடிப்படையில் இந்த வழக்கில் பிராமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள சங்கதிகள் தெரியும். **அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.** என் 4ல் 1 பாக சொத்தை என் மனைவி ஜீவனாம்சத்திற்கு பொறுப்பாக்கி (Charge) ஆக இருக்க சம்மதிக்கிறேன். அதனால் என் குழந்தைகளுக்கு 4-ல் 3 பாகம் தீர்ப்பாக சம்மதிக்கிறேன். எனக்கு 4ல் 1 பாகம் தீர்ப்பாக கோருகிறேன்.

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் - OS.No.52/2007 D.W.2**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.E.வெங்கட்ராமன், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | தனலட்சுமி அம்மாள் | தொழில்: | |
| த/பெ.: | | மதம்: | |
| கிராமம்: | | ஜாதி: | |
| வயது: | | வட்டம்: காஞ்சிபுரம் | |

**முதல் விசாரணை: 02.03.2021**

நான் அசல் வழக்கு எண்.420/2007ல் வாதி. அசல் வழக்கு எண்.52/2007ல் நான் தரப்பினர் இல்லை. இருப்பினும் மேற்படி இரு வழக்குகளையும் இணைத்து நடத்த வேண்டுமென்ற உத்தரவின் அடிப்படையில் அசல் வழக்கு எண்.52/2007ல் பிரதிவாதி தரப்பு சாட்சியாக என்னை விசாரிப்பதற்காக இன்று இந்த பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அசல் வழக்கு எண்.420/2007 வழக்குடன் நான் தாக்கல் செய்த 1 முதல் 7 ஆவணங்களை இந்த பிரமாண வாக்குமூலம் மூலம் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 07.05.1984 தேதியிட்ட 1ம் பிரதிவாதிக்கும் அவருடைய சகோதரர் சுப்ரமணியம் செட்டியாருக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1.
2. 28.03.1988 தேதியிட்ட C.O.வர்கீஸ்க்கு 1ம் பிரதிவாதியும் அவருடைய தாயார் கஸ்தூரிபாயும் எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.2.
3. 28.03.1988 தேதியிட்ட T.J.ஜார்ஜ்க்கு 1ம் பிரதிவாதியும் அவருடைய தாயார் கஸ்தூரிபாயும் எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.3.
4. 21.08.2014 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள 93ம் நம்பர் பட்டாவின் கணினி நகல் பி.சா.ஆ.4 (அசல் வழக்குடன் நகல் தாக்கல் செய்யப்பட்டு, தற்போது கணினி நகல் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)
5. 31.03.2007 தேதியிட்ட அசல் வழக்கு எண்.420/2007 வழக்கின் வாதிகள், அசல் வழக்கு எண்.420/2007 வழக்கின் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் பி.சா.ஆ.5.
6. 03.04.2007 தேதியிட்ட 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சகல ஒப்புகை அட்டை பி.சா.ஆ.6.

7. 05.04.2007 தேதியிட்ட அசல் வழக்கு எண்.52/2007 வழக்கின் வாதி, அசல் வழக்கு எண்.420/2007 வழக்கின் 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல ஒப்புகை அட்டை பி.சா.ஆ.7.

அசல் வழக்கு எண்.420/2007 வழக்கு தீர்ப்பாகவும், அசல் வழக்கு எண்.52/2007 தள்ளுபடி ஆகவும் வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:-**

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**